1989 நவம்பர் 1]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(9 50)

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்ட பிறகு தேவக் கோட்டை ஒரு ஓரமாகப் போயிருக்கிறது. அங்கு பெரும்பாலான அலுவலகங்கள் இப்போது இருக்கின்றன. ஆகையினால் அருகே இருக்கக்கூடிய அந்த அலுவலகங்களாவது எல்லா வசதிகளும் கொண்ட காரைக்குடிக்கு மாற்றப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று.

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவக்கோட்டையிலே தொடர்ந்து அலுவலகங்கள் இருந்து வருகின்றன. அது அந்தப் பகுதியினுடைய மையப் பகுதியாக இருக்கிறது. அதைத் தயவுசெய்து அங்கேயிருந்து மாற்றக்கூடாது என்பது என்னுடைய கருத்து. அரசினுடைய கருத்தை முழுமையாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, இரண்டுவிதமான போராட்டக் கருத்துக்களையும் அரசு ஆராயும்.

திருப்புவனத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி தாலுகா அமைத்தல்.

*** 6747 திரு. பெ. துரைபாண்டி :**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், திருப்பு வனத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி தாலுகா அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

[1989 நவம்பர் 1

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், திருப்புவனத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. துரைபாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியைப் பொறுத்தமட்டிலே மானாமதுரை ஒன்றியம், திருப்புவனம் ஒன்றியமும் சேர்ந்தது. அதிலே இரண்டு ஒன்றியத்திற்கும் சேர்த்து மானாமதுரை தாலுக்காதான். அந்த மானாமதுரை தாலுக்கா என்பது தமிழகத்திற்கு ஒரு தலைநகரம் அமைந்ததுபோல் அமைந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக அந்தத் திருப்புவனம் ஒன்றியம்—ஜாரி புதுக்கோட்டை, கல்மங்கலம் போன்ற பஞ்சாயத்துகள் திருப்பரங்குன்றம் தொகுதிக்குள் தேடிப் பிடிக்க வேண்டியவை. அதேபோல கிளாவரி என்ற பஞ்சாயத்து மேலூர் தொகுதிக்குள் தேடிப் பிடிக்க வேண்டிய ஒன்று. இவை எல்லாம் மதுரையை ஒட்டி இருப்பவை. ஆனால் மானாமதுரை தொகுதியோ இந்த ஒன்றியத்திலே இருந்து கிழக்கே, 55 அல்லது 60 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. நான் பள்ளிக் காலங்களில் படிக்கும் போது திருப்புவனத்திலே உள்ள தாலுக்காவிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வினாவிற்குள் பள்ளிக் கால வாழ்க்கை எல்லாம் அடங்குகிறதா ?

திரு. பெ. துரைபாண்டி : தாசில்தாரிடத்திலே கையெழுத்து வாங்கும்போது, ஜாதிச் சான்றிதழ் போன்றவைகளுக்குப் பள்ளிக் காலங்களிலே திருப்புவனத்திலேயிருந்த தாலூக்கா ஆபீசிலே நான் கையொப்பம் இட்டிருக்கிறேன். அப்படி இருக்கும் போது அந்தத் தாலுக்கா ஆபீஸ் எப்படி இப்போது இல்லாமல் போனது என்று தெரியவில்லை. நம்முடைய ஆட்சி, இழந்ததை எப்படியும் பெற்றுவிட வேண்டும் என்ற உறுதியான உள்ளத்தோடு வென்றவர்கள். அந்த ஆட்சியைச் சேர்ந்தவன் என்ற முறையிலே இழந்ததைப் பெறும் முயற்சியோடுதான் இதை நான்

1989 நவம்பர் 1]

கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதைத் தருவார்களா என்று கேட்பதைவிட, தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கையில் அமர்கிறேன், நன்றி, வணக்கம்.
(சிரிப்பு)

(பதில் இல்லை)

வல்லநாடு மலையில் மிருகங்கள்.

* 3478. திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், வல்லநாடு மலையில் உள்ள மிருகங்களை பாதுகாப்பதோடு அங்கு மான்கள் வளர்க்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) அங்குள்ள மிருகங்கள் எவை எவை ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஸ்ரீவைகுந்தம் வட்டம், வல்லநாடு மலையில் ஏற்கெனவே வல்லநாடு வெளி மான்கள் வனக் காப்பகம் அமைக்கப்பட்டு மான்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இங்கு 20 வெளி மான்கள், முயல்கள், முள்ளெலிகள் பலவகைப் பறவை இனங்கள் வாழ்கின்றன.

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தலைமைச் செயலக வளாகத்தில் உணவு விடுதியைச் சுற்றி தேங்கிக் கிடக்கும் சாக்கடை நீர்.

* 3528. திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தலைமைச் செயலக வளாகத்தில் உணவு விடுதிகளைச் சுற்றி தேங்கிக் கிடக்கும் சாக்கடை நீரை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?